REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 18உ செவ்வாய் (2—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 19உ புதன் (3—7—57) [இதழ் 15

எப்படிப் பிழைத்துக்கொண்டான்?

போபால், ஜூலை 2—

மான்சிங்!—மத்தியப் பிரதேச மாநிலத்தின் கொள்ளைக்காரனின் பெயரிது!

சென்ற ஆண்டில், அவனைப் போலீசார் சுட்டுக்கொன்றதாகச் செய்தி தரப்பட்டிருந்தது.

இப்போது போலீசார் ஒரு கொள்ளைக்காரனைக் கண்டுபிடித்துள்ளனராம்; அவன் பெயரும் மான்சிங்! இதனால், சென்ற ஆண்டில் மான்சிங் கொல்லப்பட்டதற்கு ஆதாரமில்லை என்றநிலை இப்போது உருவாகியுள்ளதாம்!

மான்சிங்—மத்தியப் பிரதேசத்தின் 'ராபின்ஹூட்' என்றே வியப்பு ஏற்படுகிறது!

காங்கிரசு ஆட்சியில் பணம் பாழாகும் படலம்!

சுண்டைக்காய் கால் பணம்! சுமைகூலி முக்கால் பணம்!

கட்டிட நிர்மாணச் செலவு ரூ. 20 இலட்சம்! அவைகளைப் பழுதுபார்க்க ரூ. 28 இலட்சம்!

அதிகாரியும் குத்தகைதாரர்களும் கூட்டாகப் புரிந்த திருப்பணி!

வழக்குத் தொடர முடியாது என சட்ட ஆலோசகர் அறிவுரை

ஆந்தை விழிப்பதுபோல் காங்கிரசு ஆளவந்தார்கள் விழிக்கின்றனர்!

சென்னை, ஜூலை 2—

"சின்கோனா துறைக்கான அலுவலகங்களுக்குச் சில கட்டிடங்கள் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. அவைகளைப் பழுது பார்ப்பதற்காக பொது மராமத்துத் துறை ரூ. 28 இலட்சம் ஆகக் கூடுமென்றும், நிலவரி நிறுவனம் ரூ. 15,20,000 செலவிட வேண்டி வரும் என்றும் மதிப்பிட்டுள்ளன"

—என்று, 1957-ம் ஆண்டு தணிக்கைக் குழு அறிக்கையில் காணப்படுகிறது.

'கட்டிடக் காப்பும் சேர்ந்த நிர்மாணமும்' என்ற தலைப்பில் மேற்படி அறிக்கை குறிப்பிட்டிருப்பதாவது :—

"பொது மராமத்துத் துறையைச் சேர்ந்த ஒரு எஞ்சினியர் மேற்பார்வையில் மேற்படி கட்டிடங்கள் தனிப்பட்ட குத்தகைதாரர்களால் கட்டப்பட்டன; காலம் வருவதற்கு முன்பே பழுதடைந்துவிட்டதற்கான அறிகுறிகள் 1951-ம் ஆண்டிலேயே மேற்படி கட்டிடங்களில் தோன்றலாயின. அதுவுமன்றி, அக்கட்டிடங்கள் ஒழுக்கலடைந்தும் விட்டன.

"அதுபற்றி ஆராயப்பட்டதில் அக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டது முழுதும் திருப்திகரமற்றதாகும் என்றும், மட்டமான தேக்கு மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும், தெரிய வந்தன.

"அக்கட்டிடங்களைநிர்மாணித்த குத்தகைதாரர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதை அரசாங்க சட்ட ஆலோசனையாளர் ஒப்புக்கொள்ளவில்லை; அரசாங்கத் துறையின்மீது அதற்கான பொறுப்பை சுமத்துவதையும் அரசாங்கம் கைவிட்டுவிட்டது.

"மேற்படி கட்டிடங்களை விசேட பழுது பார்ப்பதற்காக துவக்கத்தில், ரூ. 3-இலட்சம் செலவாக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டது; அதன் பின்னர், சின்கோனா குழு, அதற்காகும் தொகை ரூ. 20 இலட்சம் என மதிப்பிட்டது. ஆனால், பொது மராமத்துத் துறையோ அப் பழுது பார்க்கும் தொகையை ரூ. 28-இலட்சத்திற்கு மதிப்பிட்டது."

'சென்னைக்கே முதல் தகுதி உண்டு என்று வற்புறுத்தப்படுமா?'

'மத்திய அரசாங்கத்திடம் சென்னை சர்க்கார் எடுத்துரைக்க முன்வருமா ?'

சேலம் 'மாக்னசைட்' குத்தகை குறித்து கழக உறுப்பினர்கள் வற்புறுத்தல்

'எது இலாபகரமானதோ அதைத்தான் சர்க்கார் செய்யும்' என்கிறார் அமைச்சர்

சென்னை, ஜூலை 2—

'வடவர் சுரண்டலுக்குப் பலியாகாது தடுத்து, தென்னகத்தில் உள்ள 'மாக்னசைட்'டைக் கொண்டு சென்னை அரசாங்கமே தொழில் நடத்தவேண்டும்,' என்று சட்டசபையில் கழக உறுப்பினர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

1957-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர், அரசாங்கத்திடம் 'மாக்னசைட் சுரங்கத்தை'ப் பற்றி மனு கொடுத்துள்ளது பற்றி அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் சட்டசபையில் தெரிவித்தார்.

அந்த மனு இன்னும் பரிசீலனையில் உள்ளதாம்!

இந்தக் குத்தகை ஒப்பந்த நகல் உறுப்பினர்களின் பார்வைக்கு சட்டசபை படிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளதாம்!

அந்தக் குத்தகை, 10—1—59ல் காலாவதியாகிறதாம்!

அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் வேறு யாருக்கும் மாற்றும் உரிமை கிடையாது என்று குத்தகை நகலில் விதி உள்ளதாம்!

எம். பி. சுப்பிரமணியம் : "இந்த சேலம் மாக்னசைட் சிண்டிகேட் நிறுவனம், வடநாட்டில் உள்ள 'பர்ன் கம்பெனி'க்கு குத்தகை உரிமையை விற்க முற்பட்டுள்ளது உண்மையா? அதற்காக மத்திய அரசாங்கமும் சென்னை சர்க்காரை வற்புறுத்தியுள்ளது உண்மையா?"

10—1—59 வரை அப்படி ஏற்பாடு செய்துகொள்ள முயற்சியிருந்துவருகிறது என்றும், அதற்கு சென்னை அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது என்றும், சுரங்க விதிகளின்படி மத்திய அரசாங்கத்திற்கு அப்பீல் செய்துகொள்ளும் உரிமை உண்டு என்றும், மத்திய அரசாங்கம் தன்னைக் கட்டுப்படுத்தவில்லை என்றும் அமைச்சர் பதிலளித்துள்ளார்.

அரசாங்கத்தின் தொழிற்கொள்கையின் அடிப்படையில் சென்னை அரசாங்கமே அதனை ஏற்று நடத்த விரும்புவதாக மத்திய அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும், இங்கு ஆண்டுக்கு 100 ஆயிரம் பவுண்டு மதிப்புள்ள 'மாக்னசைட்' கிடைக்கிறது என்றும், எக்காரணத்தைக்கொண்டும் தனியாருக்கு இந்த தொழிலை நடத்த அனுமதி தரப்படமாட்டாது என்றும் அமைச்சர் கூறினார்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் கேட்ட மற்றொரு கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், 'இப்போது சென்னைக்கு $2\frac{1}{4}$ சத விகிதம் 'ராயல்டி' தரப்படுகிறது' என்று தெரிவித்தார்.

க. அன்பழகன் :— "மத்திய அரசாங்கத்திடம் நிலைமையை எடுத்துரைத்து சென்னைக்கே இந்தத் தொழிலை நடத்த முதல் தகுதி உண்டு என்ற நிலை ஏற்படுத்தப்படுமா?"

அமைச்சர் :— 'எது இலாபகரமானதோ அதைத்தான் அரசாங்கம் செய்யும்.'

'தி.மு.க. தலைவர் ஆதரவு தந்துள்ளார்'

'மதுவிலக்கு தீவிரப்படுத்தப்படும்'

கழக உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பக்தவத்சலம் பதில்

சென்னை, ஜூலை 1—

"1957-ம் ஆண்டில், சென்னை மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் எவ்வாறு வேலை செய்துள்ளது என்று சென்னை அரசாங்கம் பரிசீலனை செய்துள்ளது" என்று அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளாக மதுவிலக்கு சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தும், தோல்வியைக் கண்டிருப்பதாகக் கூறி, 'சட்டத்தை ரத்து செய்யும் நோக்கம் உண்டா?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"100 ஆண்டுகளுக்கு மேலாக அமுலிலுள்ள சட்டத்தில்கூட குற்றங்கள் இல்லை என்று கூற முடியாது; மதுவிலக்கு முழு அளவில் வெற்றியைத் தந்துள்ளது என்று கூறமுடியாவிட்டாலும் தோல்வியடைந்துவிட்டது என்று நிச்சயமாகக் கூறமுடியாது" என்று அமைச்சர் கூறினார்.

மதுவிலக்கு சட்டத்தை அமுல் செய்வதின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை மதிப்பிட்டு கூறத் தேவையில்லை என்றும், பெரிய மனிதர்களுக்கு அளிக்கப்படும் பங்கீடு அனுமதியை ரத்து செய்வதற்கும் மதுவிலக்கை அமுல் செய்வதற்கும் சம்பந்தமில்லை என்றும், மதுவிலக்குக் குற்றங்களை கண்டறிவதற்கு உள்ள அதிகாரிகளில் சிலர் குடிப்பழக்கம் உள்ளவர்கள் இருப்பது உண்மைதான் என்றும், அரசாங்கம் அதைப் பற்றிக் கவனித்துவருகிறது என்றும், குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள பொதுமக்கள் ஆதரவில்லாததும், அதிகாரிகளின் திறமைக் குறைவும் காரணம் என்பது தவறென்றும், 1957 சனவரியில் 11,497; பிப்ரவரியில் 7,797; மார்ச் திங்களில் 923 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தண்டனையைக் கடுமையாக்கி, குற்றவாளிகளுக்கு எப்போதும் அச்சம் ஏற்படுவதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருகிறதென்றும் அமைச்சர் கூறினார்.

மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடும் நோக்கம் சென்னை அரசாங்கத்திற்குக் கிடையாது என்றும், இந்தத் திட்டத்தைத் தீவிரமாக்கி வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் ஆதரவும் கிடைத்துள்ளது என்றும் பெருமையுடன் அமைச்சர் குறிப்பிட்டார்.

தோழர் அண்ணாமலை :—"சிங்கிரி இரசாயன உரத்திலிருந்து கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாகக் கூறப்படுகிறதே, இது அரசாங்கத்திற்கு தெரியுமா?"

அமைச்சர்:— 'கேள்விப்பட்டிருக்கிறேன்;

'காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர்கள் மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கூறிவருவதைப் பற்றி அமைச்சருக்குத் தெரியுமா? என்று கேட்கப்பட்டபோது அமைச்சர், தெரியாது' என்றார்.

"மதுவிலக்கின் காரணமாக வேலையிழந்தவர்களுக்கு வேலை தரும் நோக்குடன்-பனைவெல்லம் தயாரிக்க அனுமதி தரப்படுகிறது; ஆனால் அது, தவறாக பயன்படுத்தப்படுவதும் உண்மையே! இருந்தாலும், திட்டத்தைத் தீவிரபடுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்" என்றும் அமைச்சர் கூறினார்.

க. அன்பழகன் :—"கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறு தொழில் துறையில் வேலை தருவது, மதுவிலக்கு சட்டத்தைத் தீவிர படுத்துவதற்கு உதவுமே; அவ்வாறு அரசாங்கம் செயல்படுமா?"

அமைச்சர் :— 'மதுவை ரசிறையில் இந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களுக்கு வைகைத் திட்டத்தில் வேலைதரப்பட்டுள்ளது'

"அருகாமையில் உள்ள புதுவையில் மதுவிலக்குச் சட்டம் இல்லாததின் காரணமாக இம்மநிலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று மத்திய அரசாங்கத்திற்குப் புகார் செய்யும் நோக்கம் கிடையாது;' என்றும் அமைச்சர் விளக்கினார்.

எம். பி. சுப்பிரமணியம்:—"இப்போது உள்ள சட்டத்தின்படி தரப்படும் தண்டனை போதவில்லை; சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று புகார் செய்துள்ளதை பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது?"

அமைச்சர் :— இதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது; மதுவிலக்குச் சட்டத்தில், தேவைப்படும் மாற்றங்கள் விரைவில் செய்யப்படும் ?

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 2—7—57 செவ்வாய்

வாதமா, பிடிவாதமா?

இந்திய உபகண்டத்தை அடிமைப்படுத்தி ஆண்டுவந்த ஆங்கிலேயர், தங்களின் நிர்வாக வசதிக்கேற்ப நாட்டைப் பிரித்து ஆண்டுவந்தனர். அவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதால், மொழிவழி மாநிலம் ஏற்படுத்த வேண்டும் என்பதில்: அவர்களுக்கு அக்கறை இல்லாமல் இருந்தது ஒன்றும் வியக்கத் தக்கதல்ல!

ஆனால், இந்த நாடு விடுதலை பெற வேண்டும் என்றும், நாங்கள் காந்தியின் வாரிசுகள் என்றும் பெருமை பேசிக் கொண்டவர்கள், சுதந்திரம் கிடைத்த பின்னர் இந்த நாட்டில் மொழி வழி மாநிலம் ஏற்படுத்துவதில் உண்மையான நாட்டம் கொள்ளாததும், மக்களிடையே பேசி வந்ததைச் செயலில் காட்டத் தயங்குவதும், தங்களுடைய முரண்பாடுள்ள போக்கிற்கு நியாயம் கற்பிப்பதும், காங்கிரஸ் பாதை தவறிச் செல்லும் போது சுட்டிக்காட்டி நல்வழிக்குக் கலங்கரை விளக்காக விளங்குபவர்களை சந்தேகிப்பதும், அந்த நல்ல உள்ளம் படைத்த நாட்டுத் தம்பிகளைப் பற்றித் தவருகப் பொதுமக்களிடம் கூறுவருவதும், தமிழ் மக்களின் நலனைப்பற்றி அக்கறைகொண்டவர்களுக்கு வியப்பும் வேதனையும் நிச்சயம் தந்தேதீரும் என்பதில் சந்தேகமிருக்க இடமில்லை என்றே கருதுகிறேம்.

காந்தியார் 1921-ல், 'மொழி வழி மாநிலம்' சுதந்திர இந்தியாவின் இலட்சியம் என்று கூறினர். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கைகளில்கூட, மொழிவழி மாநிலம் இடம் பெற்றிருந்துள்ளது; ஆனல், 1947-ல் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ், 1956 நவம்பரில் அக்கொள்கையை அமுல் நடத்த அக்கறை எடுத்துக்கொண்டது; ஆனல், அதைச் சரிவரச் செய்யவில்லை என்பதற்கு, பம்பாய் மாநிலத்தில் மக்கள் நடத்தி வரும் கிளர்ச்சியே போதிய சான்ருகும்.

தமிழ் மக்கள் வாழும் நமது மாநிலம் தனியே பிரிக்கப்பட்ட பின்னரும், 'சென்னை' என்று வெள்ளையன் காலத்தில் இருந்த அவமானப் பெயரே நீடிக்கிறது.

இந்த அவமானப் பெயரை நீக்கி 'தமிழ் நாடு' என்ற தன் மானப் பெயர் சூட்டவேண்டும் என்பது மக்களின் கருத்தாகும் என்பது, எதிர்க் கட்சிகள், பொது நிறுவனங்கள், மக்கள் மன்றங்கள் : ஆகியவைகள் தீர்மானத்தின் மூலமும், மாநாடுகளின் மூலமும், தனிப்பட்ட முறையிலும் தெரிவித்துள்ள கருத்துக்களே போதுமானதாகும்.

'தமிழ் நாடு' என்ற பழம் பெரும் பெயரை புதுப்பிக்க வேண்டும் என்பதிலும், நடைபெறும் சனநாயக ஆட்சியில் மக்கள் குரலை மதிக்கவேண்டும் என்பதிலும், ஒரு சாரரால் 'பச்சைத் தமிழர் ஆட்சி' என்று வருணிக்கப்பட்டுள்ள இந்த ஆட்சி, அதுகுறித்து அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

'தமிழ் நாடு' என்ருல் எல்லோருக்கும் சுலபத்தில் தெரியாது—'சென்னை' நீண்டகாலமாக உள்ள பெயர்—வெளிநாடுகளிலும் அறிமுகமான பெயர்—என்று கூறி, 'தமிழ் நாடு' என்று பெயர்வைக்க மறுக்கும் நேர்மையாளர்கள், எந்த நியாயத்தின் அடிப்படையில் உலகமறிந்த 'இந்தியா' என்ற பெயரைமாற்றி 'பாரதம்'என்று சூட்டினரோ தெரியவில்லை?

'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க இன்றைய ஆட்சியாளர் முன்வராத நிலையிலும், எதிர் காலத்தில் இதைச் செய்ய இன்றைய ஆட்சி முன்வரும் என்ற நம்பிக்கை இல்லாத நிலையிலும், தன்மானமுள்ள தமிழர்கள் முன்னின்று போராட்டம் நடத்துவதைத் தவிர, சனநாயக ஆட்சியில் வேறு நல்ல வழி இருப்பதாக விஷயமறிந்த எவரும் கூறமாட்டார்கள்.

அண்மையில் அமைச்சர் பக்தவத்சலம், இத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகிவருவதை உணர்ந்து, மேலும் மக்கள் குறையைப் போக்க ஆக்கத் துறையில் ஈடுபடுவதற்கான வழிவகைகளை ஆராய முன்வராது, 'தமிழ் நாடு' என்று பெயரிடாவிட்டால் என்ன கெட்டுவிடும்?'—என்று ஒரு புதிய வாதத்தைக் கிளப்புவதாகக் கருதிக்கொண்டு பேசியுள்ளார்.

இந்திய மாநிலங்களை உற்று நோக்கும்போது, அசாம், வங்காளம், குசராத், காஷ்மீரம், ஒரிசா, பஞ்சாப் போன்றவை தாய் மொழிப் பெயர்களைக் கொண்டவை என்பது புலப்படும். பிற நாடுகளை எடுத்துக் கொண்டால் இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி, இத்தாலி, கிரீஸ் போன்றவை மொழிப் பெயரையே நாட்டிற்கும் சூட்டியுள்ளது தெரியவரும். இருந்தும், இன்று இங்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள அமைச்சர், 'தமிழ் நாடு என்று பெயர் வைக்காவிட்டால் என்ன, குடியா மூழ்கிவிடும்?' என்று கேட்கிறர். அப்படி 'தமிழ் நாடு' என்று இன்றைய 'சென்னை' மாநிலத்திற்கு பெயரிட்டால் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதற்கு அமைச்சர் ஏதும் விளக்கம் கூறவில்லை.

'தமிழ் நாடு' எனப் பெயரிடப் போராட்டம் நடத்த நினைப்பவர்களுக்கு அமைச்சர் பதிலளிக்காவிட்டாலும்,பொது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கேனும் 'சென்னை' என்ற பெயரை மாற்றுவதால் ஏற்படும் நஷ்டத்தைப் பற்றியும், 'தமிழ் நாடு' என்று பெயரிட்டால் என்ன ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதைப் பற்றியும் விளக்கியிருக்கவேண்டும்.

இந்தப் பெயர் மாற்றத்திற்குப் பிறகு இந்தியாவின் ஒற்றுமை குலைந்துவிடும் என்று அஞ்சி அமைச்சர் அவ்வாறு பேசியிருக்கலாமென நினைப்பதற்கும் இடமில்லை; ஏனெனில், இந்தியாவின் மற்ற பகுதிகளில் மொழிப் பெயரைத் தாங்கிய மாநிலங்கள் இல்லாமல் இல்லை. நமது மாநிலத்திற்குப் பக்கத்தில் உள்ள ஆந்திர, கேரள மாநிலங்களுக்கு மொழிப் பெயர்களே உள்ளன. இதனல் இந்தியாவின் ஒற்றுமை குலைந்துவிடும்—மொழி உணர்ச்சி பெருகிவிடும் என்று அமைச்சர் கருதாதபோது, சென்னைக்கு மட்டும் 'தமிழ் நாடு' என்று பெயரிடுவதால் இந்தியாவின் ஒற்றுமைகுலைந்துவிடும் என்று அமைச்சர் எவ்வாறு கருதியிருக்க முடியும்?

எனவே, அவருடைய வாதத்தை நன்கு ஆராய்ந்தால், அது, வெறும் பிடிவாதம நிரம்பியவரின் தெளிவுபடுத்தாத வாதம் என்றே நாம் கருதுகிறேம்.

நிலைமை இப்படி இருக்க, போராட்டத்தை அர்த்தமற்றது என்று அமைச்சர் கூறுவதில் என்ன நியாயமிருக்கிறது என்பதை, நாம் சொல்லாமலே மக்கள் உணர்வர் என்றே நம்புகிறேம்.

புத்த மதத்தை தழுவிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு

சலுகைகள் கிடையாதாம்!

அதுவே உண்மையான சோதனையாம்!

மந்திரி செகசீவன்ராம் கருத்து

ஐதராபாத், சூன் 30—

"தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படுகிற பல்வேறு சலுகைகளையும் வசதிகளையும், புத்த மதத்தைத் தழுவியவர்கள் கோர முடியாது"

என்று, மத்திய இரயில்வே மந்திரி செகசீவன்ராம் கூறியிருக்கிறாராம்!

"கல்விச் சலுகை பெற விரும்புகிற தாழ்த்தப்பட்டவர்கள் தங்களின் சாதி முதலிய விபரங்களைத் தரவேண்டியிருக்கிறது; ஆனல் புத்த மதமோ, சாதிப் பாகுபாடுகளை அங்கீகரிக்காத ஒன்று!

"தாழ்த்தப்பட்டவர்கள்—புத்த மதத்தைத் தழுவியவர்களுக்குள்ள உண்மையானசோதனை எல்லாம், தாழ்த்தப்பட்டவர்களாயிருக்கும்போது அனுபவித்து வந்த சலுகைகளை எல்லாம், புத்த மதத்தைத் தழுவியதும் அவர்கள் விட்டுவிடத் தயாராயிருக்கின்றனரா என்பதுதான்"

என்றும், அந்த மந்திரி கூறினராம்!

மூலதன முதலீட்டுக்கு பணம் கிடைக்குமா?

'முன்னேறிச் செல்வோம்' என்கிருர் நிதி அமைச்சர்

1957—58-ம் ஆண்டிற்கான சென்னை மாநில அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ரூ. 32 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டக் குழு நிர்ணயித்த வரம்பும் இதுவே ஆகும்.

மூலதன முதலீடு

இதில் ரூ. 23 கோடியே 49 இலட்சம் மூலதன முதலீடாகும்.

கடன் முன்பணம்

கடன் முன்பணம் கொடுக்கும் வகையில் ரூ. 7 கோடியே 93 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் சென்னை அரசாங்கத்திற்கு 35 கோடியே 63 இலட்சம் ரொக்கமாகத் தேவைப்படுகிறது.

ஆனல் ரூ. 22 கோடியே 55 இலட்சம் அளவிற்குத்தான் வரவு இனங்கள் உள்ளன.

இதனல் மத்திய அரசாங்கத்தை சென்னை எதிர்பார்த்துள்ளதாம். உதவிக்காக நிதிக் குழுவிடம் சென்னை வற்புறுத்தியுள்ளதாம்.

இந்த நிலையில் மூலதன முதலீடுக்குக்கூடப் போதிய பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை நிதி அமைச்சருக்கே இல்லை என்ற நிலை வெளிப்படையாகிவிட்டது.

'எப்படியும் சமாளித்துக்கொள்வோம் என்ற உறுதியில், இப்போது நாம் முன்னேறிச் செல்வோமாக' என்று வரவு-செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் கூறியிருப்பதே இதற்குப் போதிய ஆதாரமாகும்.

டில்லியைக் கேட்டு

தெரிந்துகொள்ள வேண்டுமாம்

ஜினீவாசென்றதின் பயன்என்ன

1956-ம் ஆண்டில் தொழில் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம், ஜினீவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டிற்கு இந்தியக் குழுவின் தலைவராக சென்று திரும்பினர். அங்கு அவர் சென்றதேன்? என்ன செய்தார்? இந்த வெளி நாட்டு உல்லாசப் பிரயாணமும் மாநாடும் எந்த அளவிற்கு இந்த நாட்டிற்குப் பயன்பட்டது?—என்ற தகவல் எதும் இதுவரை தரப்படவில்லை.

இதைப் பற்றி சென்னை சட்டசபையில் கேள்வி எழுப்பப்பட்டது.

திரு. பக்தவத்சலம் ஜினீவா சென்றுவர ரூ. 6843·62 அரசாங்கம் செலவிட்டுள்ளது என்றும், அவர் திரும்பியதும் மத்திய அரசாங்கத்திற்கு அறிக்கை தந்துள்ளார் என்றும், அந்த அறிக்கையைப் பற்றி சென்னை அரசாங்கம் மேலும் தகவல் தரமுடியாது என்றும், தேவையானல் டில்லி மக்கள்சபையில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்றும நிதியமைச்சர் கூறினர்.

★

வாக்காளர் பட்டியல் ஊழல் எதிரொலி

தனி அதிகாரிகளை நியமிக்க ஏ. கோவிந்தசாமி கோரிக்கை

புதிய பட்டியல் தயாரிக்க க. அன்பழகன் யோசனை

வாக்காளர் பட்டியலில் உள்ள குறைபாடுகளைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்றும், பின்னர் அதுபற்றி தக்கநடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்றும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்தார்.

'இந்தப் பட்டியலைத் தயாரிக்க தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும்' என்று தோழர் ஏ. கோவிந்தசாமி கோரினர்.

அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளிக்கையில், அவ்வாறு செய்வதற்கு இல்லை என்றும், பட்டியல் திருத்தம் 15, 20 நாட்களில் முடிந்துவிடுகிறது என்றும் கூறினர்.

"இப்போது உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களில் 50 முதல் 60 சதவிகிதம் தவறுகள் காணப்படுவதால், வேறு புதிய பட்டியலையே தயாரிக்கலாம்" என்று, தோழர் க. அன்பழகன் யோசனை கூறினர்.

★

ஊராட்சி மன்றப் பள்ளிகளில்

சம்பளச் சலுகை

சென்னை, சூன் 28—

ஊராட்சி மன்றப் பள்ளிகளில் மூன்ருவது படிவம்வரை, ஆண்டுக்கு ரூ. 1,200-க்கு மேற்படாத ஊதிய வருமானம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் பள்ளிக்கூடச் சம்பள சலுகையை விரிவுபடுத்தி, சட்டசபையில் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கொண்டுவந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

கண்துடைப்பு வேலை ஆரம்பமாகிறது?

அரசாங்க இலாகா அமைப்புகளை ஆராய அதிகாரியாம்!

சிக்கனத்திற்கான முறைகளை வகுத்துத் தருவாராம்

சென்னை, ஜூலை 1—

நிர்வாகம் திறம்பட நடக்கவும், சிக்கனத்தை மேற்கொள்ளவும் சென்னை அரசாங்கம் முதிர்ந்த அனுபவம் பெற்று உயர் பதவியிலுள்ள ஒரு விசேட அதிகாரியை நியமிக்குமாம்.

அவர் ஒவ்வொரு இலாகாவின் அமைப்பைப் பற்றியும், அதற்குத் தலைநகரிலும் மற்ற மாவட்டங்களிலும் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை குறித்தும் நன்கு ஆராய்ந்து யோசனைகளைக் கூறுவாராம்.

ஒவ்வொரு இலாகாவின் செலவினங்களையும் அவர் பரிசீலனை செய்து சாத்தியமான அளவிற்கு சிக்கனத்திற்கான வழிதுறைகளை எடுத்துக்காட்டுவாராம்.

ஒவ்வொரு இலாகாவிற்குமான அறிக்கையை அவ்வதிகாரி சமர்ப்பித்தவுடன், அமைச்சரவை அதை ஆராய்ந்தபின் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமாம்.

'இந்தவகையில் ஓரளவு செலவு குறையலாம்; ஆனல் அது, எந்த அளவில் இருக்குமென இப்பொழுது உறுதியாக மதிப்பிட இயலாது; எனவே, வரவு-செலவுத் திட்டத்தில் அதைக் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை' என்று, வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உற்பத்தி இலட்சணம் இதுதானு?

உண்மைகள் அம்பலமாகின்றன

சென்னை, ஜூலை 1—

1956-ல் விவசாய உற்பத்தி நிலையைக் காட்டும் குறி எண் 115 ஆக இருந்தது—பருவநிலை சாதகமாக இருந்ததால் 1956—57-ல் 119 ஆக உயர்ந்துள்ளதாம்.

இந்தியா முழுவதும் உற்பத்தி பெருகியுள்ளதாம். 1955—56-ல் 268 இலட்சம் டன் அரிசியும், 1956—57-ல் 280 இலட்சம் டன் அரிசியும் விளைந்துள்ளதாம்.

இதேபோன்று, கோதுமை 83 இலட்சம் டன்னிலிருந்து 86 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளதாம்.

பருத்தி 20 சதவிகிதம்; நிலக்கடலை 6 சதவிகிதம்; கரும்பு 17 சதவிகிதம் என்ற அளவில் உற்பத்தி அதிகரித்துள்ளதாம்.

சென்னை மாநிலத்தில்!

சென்னை மாநிலத்தில் அரிசி 4·7 சதவிகிதம்; புஞ்சைத் தானியம் 3·3 சதவிகிதம்; நிலக்கடலை 4·1 சதவிகிதம்; பருத்தி 6·9 சதவிகிதம்; கரும்பு 9·4 சதவிகிதம் உற்பத்தி பெருகியுள்ளதாம்.

காரணம் என்ன?

உற்பத்தி பெருகியும், விலைவாசிகளின்நிலை மக்களுக்கு சாதகமாக அமையவில்லை என்பது, உணவுப் பொருள்களின் மொத்த விலைக் குறி எண் காட்டுகிறது; 377-லிருந்து 482 ஆக அது உயர்ந்துள்ளது.

'நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது அரிசி பற்றுக்குறை ஓரளவு உள்ளது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்; வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதில் நாளுக்கு நாள் கஷ்டம் அதிகமாகி வருகிறது' என்று நிதி அமைச்சர், வரவு—செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளது பல உண்மைகளை சூசகமாக அம்பலமாக்குவதாகும்.

சென்னை-மயிலையில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் இலட்சிய முழக்கம்

45-வது வட்ட தி. மு. கழகக் கிளையை ஆர். எஸ். பாண்டியன் திறந்துவைத்தார்

சென்னை, ஜுன் 29—

நேற்று மாலை 6-30 மணிக்கு, சென்னை - மயிலையில், 45-வது வட்ட தி. மு. கழகக் கிளைத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் டி. தம்பிதுரை அவர்கள் தலைமையில் வெகுசிறப்புடன் நடைபெற்றது.

துவக்க விழாவுக்கு வந்திருந்த எல்லோரையும் வரவேற்று தோழர் இரத்தினவேலு உரையாற்றினர்.

கழகத்தைத் திறந்துவைத்து தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் உரையாற்றினர்.

விழாவில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பான ஓர் பேருரை நிகழ்த்தினர்.

தலைவர் தனது தலைமையுரையில் விழா இனிது நடைபெற எல்லா உதவிகளையும் செய்தளித்த அவ்வட்ட பார்ப்பன நண்பர்களைப் பாராட்டியும், உதவிக்கு நன்றி தெரிவித்தும், கழகம் ஆற்றியுள்ள பணிகளையும்—ஆற்றவிருக்கும் பணிகளையும் எடுத்துக் கூறி அவ்வட்டப் பொது மக்களை கழகத்தில் உறுப்பினராகும்படி கேட்டுக் கொண்டார்.

கழகத்தைத் திறந்து வைத்துப் பேசிய பேசிய தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், காங்கிரசு அமைச்சர்கள் தங்களுக்கு முழுபலம் இருக்கிறது என்ற துணிவில் மாற்றுக் கட்சியை துச்சமாக மதித்து நடந்தால் ஏற்கெனவே துச்சமாக மதித்து நடந்த ஆச்சாரியார் அவர்களுக்கு ஏற்பட்ட பதவியிழப்பு முடிவுதான் ஏற்படுமென்பதை சுட்டிக் காட்டியும், புதுவரிகளை கண்டிக்கும் மற்ற அகில இந்தியக் கட்சிகள், போதிய சான்றுகளின்றி—பலமிழந்து எதிர்ப்பதையும் தி.மு. கழகம், வடநாட்டு ஏகாதிபத்திய எண்ணம் கொண்ட ஆட்சியாளர்களின் போக்கை எடுத்துக்காட்டி, ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் நாட்டை புறக்கணித்திருப்பதைத் தெளிவாக்கி, 'வட நாடு வாழ தென்னாடு வாழ்விழந்து போகும் நிலைவரையில் வரிகளை செலுத்த வேண்டுமா' என்ற கேள்வியை மக்களிடம் எழுப்பி புது வரிகளை எதிர்க்கிறது என்றும், இன்றைய ஆட்சியாளர் வடநாட்டில் வாழ்க்கைத்தரம் மேலும் மேலும் உயர பெரும் பெரும் திட்டங்களைப் போட்டு, அதற்கு உலக பாங்கியில் கடன் வாங்கி யிருப்பதையும், அதை எதிர்காலத்தில் தென்னாடும் சேர்ந்துதான் திரும்பச் செலுத்த வேண்டும் என்ற அவல நிலையையும் விளக்கியதோடு, தேர்தலுக்குப்பின் கழகத்தின் வலிவு பெருகி வருவதை எடுத்துக் கூறினர்.

அடுத்து சிறப்புரையாற்றிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. கழகத்தின் அரசியல்-பொருளாதார - சமுதாயக் கொள்கைகளை விளக்கியதோடு, தி. மு. கழகம் சட்டமன்றம் சென்ற பிறகு ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை - தமிழ் முழக்கத்தை மாற்றுக் கட்சிப் பத்திரிகைகளே புகழ்வதை ஆதாரத்துடன் எடுத்துக் காட்டினர். இந்த நாட்டில் குடியேறும் வடநாட்டினர், இங்கே பெறும் ஆதிக்கத்தை விளக்கி, இங்கிருந்து சென்ற தமிழன் ஒவ்வொரு நாட்டிலும் படும் அல்லல்களை விளக்கி இதற்கு முடிவு 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதுதான் என்பதைச் சுட்டிக் காட்டினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தலைவர்களுக்கு பல கிளைகளின் சார்பிலும், மன்றங்களின் சார்பிலும் மலர் மாலைகளும் - கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் டேப்-இராதாமாணிக்கத்தின் இன்னிசையும் நிகழ்ந்தது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் உண்டு?

பருவ மாறுதல்களும் ஏற்படுகின்றனவா ?

பினாக்ஸ்டாப், அரிசோனு—

பூமியில் இருப்பதைப் போன்ற உயிரினங்கள் செவ்வாய்க் கிரகத்தில் இருக்க முடியுமா என்பது குறித்து உயிர் நூல் நிபுணர்கள், வான ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கின்றனர்.

பூமியில் ஏற்படுவதைப்போல் செவ்வாய்க் கிரகத்திலும், வசந்தம், கோடை, இலையுதிர் காலம் குளிர் காலம் போன்ற பருவ மாறுதல்கள் ஏற்படுவதாக அவ்வாராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

செவ்வாய்க் கிரகத்தில் நுண் உயிர்கள் இருக்கக் கூடுமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அவரால் இயலவில்லையாம்!

ஐதராபாத், ஜுன் 30—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னை - விழுப்புரம் பாதையில் மின்சார இரயில் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமென்ற உறுதி மொழி சென்னை சர்க்காருக்கு முன்னமேயே அளிக்கப்பட்டிருக்கிறது; ஆனல், எப்பொழுது இத்திட்டம் அமுலாக்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று என்னுல் கூற இயலவில்லை," என்று இரயில்வே அமைச்சர் கூறினராம்.

விருகம்பாக்கத்தில் ஆசைத்தம்பி கொள்கை விளக்கம்

தோழர்கள் கோகுலகிருஷ்ணன், தென்னரசு கலந்துகொண்டனர்

சென்னை, ஜூலை 2—

சென்னை — கோடம்பாக்கம் அருகிலுள்ள விருகம்பாக்கத்தில், தோழமைக் கழகத் துவக்க விழா, 29—6—57 அன்று இரவு 7 மணி அளவில், விருகம்பாக்கம் 'கோல்டன்' படப்பிடிப்பு நிலையத்தருகிலுள்ள இடவில் தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம், அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

துவக்க விழாவில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பிஎம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

தலைவர் தனது தலைமையுரையில், தோழமைக் கழகத்தில் தி. மு. கழகத் தோழர்கள் மட்டுமின்றி மற்றக் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து கட்சி வேறுபாடு இன்றி பொதுமக்களுக்குப் பணியாற்றலாமென்றும், அத்தகுப் பணிக்கு மாற்றுக் கட்சித் தோழர்களின் நல்லெண்ணம் தேவை என்பதை எடுத்துக்காட்டினர்.

அடுத்துப் பேசிய தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் அகில இந்தியக் கட்சிகளுக்கும் தி. மு. கழகத்திற்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமைகளைத் தெளிவாக்கி, நமது மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' எனப் பெயரிடக்கூட உரிமையில்லாது வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையை எடுத்துக்காட்டி, நாம் சிறப்புற வாழவேண்டுமாயின் திராவிடம் தனித்தாக வேண்டும் என்று விளக்கினர்.

பின்னர் பேசிய வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கள், கழகத்திற்கும்—பொது மன்றங்களுக்கும் உள்ள தொடர்புகளை விளக்கியும், புதிய வரிகளால் மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகளை விவரித்தும், தோழமைக் கழகம் ஆற்ற வேண்டிய பணிகளை எடுத்துக் கூறியும் உரையாற்றினர்.

இறுதியாகப் பேசிய தோழர் ஏ. வி. பி. ஆசைதம்பி எம்.எல்.ஏ. அவர்கள் தி. மு. கழகம் சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள பணிகளையும், மக்களிடம் தற்போது சமுதாயத் துறையில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும், மக்களிடம் தோழமை ஏற்பட வேண்டியதன் அவசியத்தையும், மக்களிடம் மூடநம்பிக்கைகளாலும், சாதிப் பிரிவுகளாலும், பணக்காரன் — ஏழை என்ற வேறுபாடுகளாலும் ஏற்படும் வேற்றுமைகளைக் களைய வேண்டியதின் தேவையையும், அதற்குக் கல்வித்துறையினர் மேற்கொள்ள வேண்டிய பணியினையும், பொது மக்கள் தோழமைக் கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய முறையையும் தெளிவாக்கி பேருரை நிகழ்த்தினர்.

தலைவரின் முடிவுரைக்குப்பின் தோழர் வி. பி. தாணி நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்டத்திற்கு ஏராளமான கிராம மக்கள் வந்திருந்து சொற்பொழிவைக் கேட்டு விளக்கமறிந்தார்கள். (ந. கி.)

விசைத்தறியும் அரசாங்கமும்

காஞ்சி நெசவுத் தொழிலாளர் சங்கத் தலைவர் அறிக்கை

சென்னை, ஜூலை 1—

காஞ்சீபுரம் நெசவுத்தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஜி. கே. கண்ணன் அவர்கள் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

ஜுன் 27-ந் தேதியன்று, சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது, தொழிலாளர் நல அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள், விசைத்தறி சம்பந்தமான கேள்விக்கு அளித்த பதிலில், 'மற்ற மாநிலங்களில் விசைத்தறி விநியோகிக்கப்பட்டு, அதில் உற்பத்தியாகும் துணி சென்னை மாநிலத்தில் விற்பனைக்கு வரும்போது மீண்டும் இப்பிரச்சினை பரிசீலிக்க நேரிடலாம்' என்று கூறியிருப்பது சென்னை அரசியலார் மறைமுகமாக விசைத் தறியை சென்னை மாநிலத்தில் புகுத்த முடிவு செய்ததையே காட்டுகிறது.

மேலும், பட்டு நூல் அல்லது செயற்கைப் பட்டு இவைகளைத் தயாரித்து விசைத்தறிகளுக்கு அனுமதிக்கலாம், என்றும் அமைச்சர் கூறியுள்ளார். சென்னை அரசியலார் முடிவு தவருனது; இம்முடிவை பலமாக ஆட்சேபிப்பதுடன், சென்னை அரசியலார் இம்முடிவை உடனடியாக கைவிட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறிக்குப் பதிலாக விசைத்தறியைப் புகுத்துவதை எக்காரணத்திற்காக சென்னை அரசாங்கம் கைவிட்டிருக்கிறதோ, அதே காரணம், பட்டு நூல்—செயற்கைப் பட்டு உற்பத்தி கைத்தறிகளுக்கும் பொருந்தும்.

பட்ட நூல்—செயற்கைப் பட்டு தறிகளில், விசைத்தறியைப் புகுத்தினல் மேற்படி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு, மீண்டும் அத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் கிளர்ச்சி செய்யவும் நேரிடும்; அத்தொழிலையும், தொழிலாளர்களையும், பாதுகாக்க அரசாங்கம் சிந்திக்க வேண்டி நேரிடும் என்று தெரிவித்துக் கொள்வதுடன், சென்னை மாநிலத்தில் எந்தவகை கைத்தறி நெசவிலும் விசைத்தறி புகுத்துவதை உடனே ரத்து செய்ய வேண்டுகிறேன்.

நெசவுத் தொழிலாளர்கள் இதனை அறிந்து தக்கநடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்பளிப்புகள்

சென்னை — பீமன்னன் பேட்டை வள்ளுவர் கல்விக் கழகச் செயலாளர் தோழர் என். துரைசாமியின் பெண்மகவுக்கு, அண்ணா அவர்களால் 'தமிழ் செல்வி' என்று பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

6—5—57-ல் குன்றத்தூரில் தோழர் கண்ணப்பர் தலைமையில் கலப்பு மணம் செய்து கொண்ட தோழர் பூ. கணேசன்—தோழியர் கனகா ஆகியோர் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. அன்பளிப்பாகத் தந்துள்ளார்கள்.

* * *

திருச்சி மாவட்டம்—புங்கங்குழியடுத்த ஒட்டக்கோவில் தி. மு. கழகத்தின் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

2—6—57-ல், வ. ஆ. மாவட்டம்—விளாப்பாக்கம் தோழர் ஆ. க. வேலாயுதனரின் புதுமனையை களம்பூர் தோழர் அண்ணாமலை எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

2—6—57-ல், வ. ஆ. மாவட்டம்—விளாப்பாக்கம் தோழர் தி. காளத்தியின் ஆண் மகவுக்கு, களம்பூர் தோழர் அண்ணாமலை எம்.எல்.ஏ. அவர்களால் 'பாண்டியன்' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

2—6—57 வ. ஆ. மாவட்டம்-விளாப்பாக்கம் தோழர் தி. குப்புசாமியின் ஆண் மகவுக்கு 'உதய சூரியன்' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

மாயூரம் வட்டம்-பாண்டூரில் தோழர் கோ. வீரப்பன் தலைமையில் நடைபெற்ற தோழர் சி. கோபால்—தோழியர் அ. அபூர்வம் திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

நாலுபுலிக்கோட்டை தி. மு. கழகக் கிளைச் செயலாளர் தோழர் ஏ. எஸ். வேலன் சார்பில் ரூ. 1-ம், தோழர் செல்லமுத்து சார்பில் ரூ. 1-ம், ஆக ரூ. 2 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாக அனுப்பப்பட்டுள்ளது.

* * *

16—6—57-ல் வடக்கு மருதூரில் தோழர் வை. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற தோழர் வைத்தியனுதன்—தோழியர் முத்தம்மாள் திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

* * *

செஞ்சி வட்டம்—தென்பாலை தி. மு. கழகத் தோழர் கண்ணனின் துணைவியார் தோழியர் கண்ணகி 7—6—57ல், ஓர் ஆண் மகவுக்குத் தாயானர். இதன் நினைவாக தோழர்களுக்கு தேனீர் விருந்தும்-இனிப்பும்வழங்கப்பட்டதோடு, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1-ம் அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

அறந்தாங்கி தோழர் மு. வடிவேலு—தோழியர் காமாட்சி திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ, 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

மேற்கண்ட அன்பளிப்புத் தொகைகள் அனைத்தும் வரப்பெற்ரேம் - நன்றி - (ஆ - ர்.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 7/57

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், **7-7-57** ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிரேம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக்கொள்கிரேம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிருர்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிருர்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாடுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை சட்டசபையில் கேள்வி நேரம் :

வெறும் கண்துடைப்புத் திட்டமல்லவாம்!

க. அன்பழகன் கேள்வி: அமைச்சர் மழுப்பல்

சென்னை, ஜூலை 1—

காலணி (பாதரட்சை) தயாரிப்பு நிலையங்கள் காந்தி கிராமம், ஈரோடு, பல்லாவரம், சேலம், மதுரை ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது என்றும் தீக்குச்சித் தயாரிப்பு நிலையம் சென்னையில் துவக்கப்பட்டுள்ளது என்றும் தொழில் அமைச்சர் ஆர். வெங்கடராமன் சட்டசபையில் தெரிவித்தார்.

பெரம்பூரிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையில் 900 பேர் மட்டுமே வேலை செய்கின்றனராம்.

சென்னை நகரில் காலணி பிரிவுகளில் பயிற்சி பெற்ற 20 பேர்களை மட்டுமே ஈடுபடுத்தியுள்ளனராம்.

ஆண்களுக்கான காலணிகள் 1,765; பெண்களுக்கான காலணிகள் 1,091 தயாரிக்கப்பட்டதில் 617 மட்டுமே விற்பனையாயிற்றாம்!

'மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவே இந்தத் திட்டமாகும்' என்று அமைச்சர் கூறியபோது, தோழர் க. அன்பழகன், 'இது வெறும் கண்துடைப்பு செய்யும் திட்டமா?' என்று கேட்க, அமைச்சர், 'இல்லை' என்று பதிலளித்தார்.

★

நிதி அமைச்சரின் சுய விளம்பரம்!

அபிவிருத்தி வேலைகள் நன்றாக நடைபெறுகிறதாம்

ஸ்தல அபிவிருத்தி வேலைகள் பற்றி இன்று சட்டசபையில் சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்டன.

1954—55-ல் ரூ. 5,40,592 பொதுமக்களிடமிருந்து ரொக்கமாகப் பண உதவி பெறப்பட்டதாம்; 1955—56-ல் ரூ. 5,59,000 பெறப்பட்டதாம்.

'உழைப்பு' அல்லது 'பண்டங்கள்' மூலம் 1954—55-ல் ரூ. 33,53.023-ம், 1955—56-ல் ரூ. 71,02,057-ம் தரப்பட்டது என்று நிதி அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்காக 1954—55-ல் ரூ. 1,12,20,000; 1955—56-ல் ரூ. 2,31,81,423 செலவிடப்பட்டுள்ளதாம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடி தண்ணீர் வசதிகள் அளிப்பதற்குப் பணம் தரவேண்டியதில்லை என்று சலுகை தரப்பட்டதாம்.

அரசாங்கம் செய்யும் உதவி 50 சதவிகிதமாம்; ஸ்தல ஸ்தாபனங்களின் உதவி அவற்றின் நிதி வசதியைப் பொறுத்ததாம்.

சென்ற ஆண்டில் அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையைவிட அதிகம் செலவிடப்பட்டுள்ளதாம்.

தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலின் காரணமாக கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டதாம்;

செலவிடப்படும் மொத்தத் தொகையில் கன்னியாகுமரி பகுதியில் மாவட்டக் கழகம் இல்லாததால் அரசாங்கம் 3-ல் 2 பங்கும், மற்ற இடங்களில் 4-ல் 3 பங்கும் ஏற்றுக் கொள்கிறதாம்.

கிராம, பிர்க்கா அடிப்படையில் அபிவிருத்திவேலைகளைக் கவனிக்க எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், இப்போது அபிவிருத்தி வேலைகள் நன்றாக நடைபெறுகிறது என்றும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'உணவு மண்டலம்' ஏற்படாது?

அமைச்சரின் சந்தேகம்!

நெல்லுக்கு விலை நிர்ணயம் இப்போது இல்லையாம்!

பத்தாண்டு காலம் காங்கிரஸ் நாட்டை ஆண்டு, பல கோடி ரூபாயை உணவு உற்பத்திக்காகச் செலவிட்ட பின்னரும், இன்று நாட்டில் ஒரு சில பகுதிகளில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பதை சென்னை நிதி அமைச்சரே தனது வரவு-செலவுத் திட்டத்தில் ஒருவாறு ஒப்புக்கொண்டுள்ளார். இந்த மாநிலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படாதவாறு தடுப்பதற்கு சென்னை அரசாங்கம் ஏன் தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டன.

நெல்லுக்குக் குறைந்தபட்ச விலையும், உயர்ந்தபட்ச விலையும் நிர்ணயிக்கும் யோசனை சென்னை அரசாங்கத்திற்கு இப்போது இல்லை என்று உணவு அமைச்சர் பி. பக்தவத்சலம், சட்டசபையில் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளதானது, அரசாங்கத்தின் அலட்சியப் போக்கையும், உணவுப் பிரச்சினையில் அவர்களுக்குள்ள அக்கறையின்மையையும் எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுகிறது.

உணவு மண்டலங்கள் ஏற்படுத்துவது பற்றி எவ்வித தகவலும் இல்லை என்றும், ஐதராபாத்தில் நடைபெறவிருக்கும் உணவு மந்திரிகள் மாநாடு இது பற்றி பரிசீலனை செய்யுமென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

தஞ்சையிலிருந்து கேரளத்திற்கு அரிசி கள்ளக்கடத்தல் செய்யப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமாம்!

தற்போது நெல் விலை குறைவு என்று கருதுவதற்கில்லைஎன்றும், ஆனால், மேலும் உயராமல் தடுப்பதே நோக்கம் என்றும், தஞ்சை மாவட்டத்தில் அதிக நெல் கையிருப்பு இல்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

சட்டசபையில் மானியக் கோரிக்கைகள்

விவாதத்திற்கான நேரம்

சென்னை, ஜூலை 1—

சென்னை சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்தவுடன் மானியக் கோரிக்கைகள் வரிசையாக எடுத்துக் கொள்ளப்படுமாம்; அதன்மீது விவாதத்திற்கான நேரத்தை சபைத் தலைவர் நிர்ணயித்துள்ளார்; நேரங்கள் விவரம் வருமாறு :—

நெல் வருமான இலாகா மானியம்—4 மணி நேரம்; பொது விற்பனை வரி முதலிய வரிகள்—4 மணி நேரம்; சுங்க இலாகா—2 மணி நேரம்; காட்டிலாகா—4 மணி நேரம்; மின்சாரம்—3 மணி நேரம்; நீர்ப்பாசனம்—4 மணி நேரம்; மாவட்ட நிர்வாகம்—4 மணி நேரம்; அமைச்சர்கள், அதிகாரிகள் ஊதியம்—2 மணி நேரம்; சட்டசபை—1 மணி; சிறைச்சாலைகள்—1 மணி; போலீஸ்—3 மணி; கல்வி—4 மணி; வைத்தியம், சுகாதாரம்—3 மணி; விவசாயம், மீன், கால்நடை இலாகா, சமுதாய நலத் திட்டங்கள்—5 மணி; தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்—4 மணி; சிவில் வேலைகள்—3 மணி; தொழில், சின்கோனு—3 மணி; சாலை, போக்குவரத்து—2 மணி.

மற்ற மானியங்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படுமாம்!

கழகக் கூட்டம்

★

திருப்பராய்த்துறை:
ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடத்திற்கு அருகில்
4—7—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்: டி. என். வையாளி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எம். எஸ். மணி
சு. நெடுமாறன்
குடந்தை-மன்னன்

வள்ளுவர் விழா

3—7—57 மாலை 6-மணிக்கு, திருவள்ளூர் பெரியசாலை—பாடி கிராமம் வள்ளுவர் படிப்பகத்தின் சார்பில், தோழர் அக. பசுபதி தலைமையில் வள்ளுவர் விழா நடைபெறும்; அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. கே. வில்வம், சி. வி. ஆடலழகன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

நடமாடும் சினிமா வானொலி சாதனங்கள்

இந்தியாவிற்கு அன்பளிப்பாக ரஷ்யா தயாரித்துள்ளதாம்

புதுடில்லி, ஜூலை 1—

இந்தியாவிற்காக நான்கு நடமாடும் சினிமா வானொலி சாதனங்களை சோவியத் ரஷ்யா தயாரித்துள்ளதாக செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

மின்சார வசதி இல்லாத கிராமப்புறப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இவை பயன்படுமாம்.

மேட்டுப்பாளையத்திலா ரேயான் தொழிற்சாலை?

ரூ. 7 கோடி தேவைப்படுமாம்

கோவை, ஜூலை 1—

மேட்டுப்பாளையத்தில் ரேயான்—நார்ப்பட்டு தொழிற்சாலை அமைக்கப்படஇருக்கும் இடத்தை மத்திய கனரகத் தொழில் அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.

இங்கிருந்து 25 மைல் தூரத்தில், நீலகிரி மலையடிவாரத்தில் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும்.

இந்தத் தொழிற்சாலையை அமைப்பதில் இத்தாலிய அரசாங்கமும், 'இத்தாலி விஸ்கோஸா' என்ற நிறுவனமும் பெரும் உதவி அளிக்க முன்வந்துள்ளதாம்.

தென்னிந்திய துணி ஆலை நிறுவனங்கள் கூட்டாக இதற்கு ரூ. 1 கோடி முதலீடு செய்ய, முன் வந்துள்ளது; பொது மக்களின் பங்காக ரூ. 1 கோடி எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு நாள் ஒன்றுக்கு 10 டன் ரேயானும், 10 டன் நார்பட்டும் தயாரிக்கப்படுமாம்.

இந்த தொழிற்சாலை அமைக்க ரூ. 7 கோடி தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

'தேர்மல்' நிலையம் ஏற்படும்?

மேட்டுப்பாளையத்தில் விரைவில் ஒரு 'தெர்மல்' மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படும் என்று மத்திய கனரகத் தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னை, ஜூலை 1—

சென்னை மாநிலத்தில் மேலும் 83 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதாம். இத்துடன் இப்போது மொத்தம் 730 நியாய விலைக் கடைகள் உள்ளதாம்.

மொத்தம் 84,912 டன் அரிசி மக்களுக்கு விற்கப்பட்டுள்ளதாம்.

'மக்களாட்சி'

'மக்களாட்சி' ஆசிரியர் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி சளிக் காய்ச்சலால் கடந்த பதினைந்து நாட்களாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் 1—7—57 அன்று 'மக்களாட்சி' இதழ் வெளிவருவது தடைபட்டுள்ளது; 15—6—57 முதல் தொடர்ந்து வெளிவரும்.

'ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் அவசியம் தேவை'

'வரவு-செலவுத் திட்டம் நம்பிக்கை தருவதாக இல்லை'

'உணவு பிரச்சினையில் அரசாங்கம் அலட்சியப் போக்கு காட்டக்கூடாது'

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் ஏ. கோவிந்தசாமி வற்புறுத்தல்

சென்னை, ஜூலை 1—

சென்னை மாநில அரசாங்கத்தின் 1957—58-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது விவாதம் துவங்கி, உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இந்த விவாதம் 5 நாட்கள் நீடிக்கும். நான்காவது நாள் பிற்பகலில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். ஐந்தாம் நாள் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பின்னர் நிதி அமைச்சர் பதிலளிப்பார்.

இன்றைய விவாதத்தில் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களைத் திரட்டித் தந்துள்ளோம் :—

பற்றுக்குறை நிதிக் கொள்கை மூலம்தான் திட்டங்கள் வெற்றி பெறும் என்று அரசாங்கம் நம்புவதும், பண்டித நேரு மாநிலங்கள் பற்றுக்குறை 'பட்ஜெட்' தயாரிப்பதைக் கண்டித்திருந்தும் இந்த மாநிலத்தில் பற்றுக்குறை 'பட்ஜெட்' தயாரித்துள்ளதை கண்டித்தும் திரு. டி. எஸ். இராமசாமி பேசினர்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் பொதுவாகத் திட்டத்தை ஆதரித்துப் பேசினர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நிதி அமைச்சர் தயாரித்துள்ள வரவு-செலவுத் திட்டம் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. நாட்டில் சீதோஷ்ணமும் மழையும் சாதகமாக இருந்தது என்றும், உணவுத் தானியங்கள் அதிகம் விளைந்து உற்பத்தி பெருகியுள்ளது என்றும் அவர் ஓ[illegible]த்தில் தெரிவித்துள்ளார். ஆனால் அதே உரையில் மற்றோரிடத்தில் உணவுத் தானியங்களின் விலை உயர்ந்துகொண்டே வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"உணவுப் பிரச்சினைத் திட்டத்தில் அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், எதிர்காலத்தில் இம்மாநிலத்தில் உணவுப் பிரச்சினை கவலைக்கிடமாகவே உள்ளது. 'மக்கள் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள்; அதனால் தான் அதிக உற்பத்தி இருந்தும், விலைவாசி உயர்ந்துள்ளது,' என்று கூறிவிடக்கூடாது. அதைவிட, மக்களை, 'சாப்பிடாதீர்கள்,' என்றுகூட யோசனை கூறலாம்.

"உணவுத் தானியங்களின் விலையைக் குறைத்து நிரந்தரமாக்க முயலவேண்டும்; ஏழை மக்களுக்கு, இந்த அடிப்படை வசதியை அவசியம் செய்யவேண்டும்.

"உணவுப் பதுக்கலைத் தடுக்க வேண்டும். மேலும் தேவைப்படும் அளவிற்கு உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யவும் தயங்கக்கூடாது,

"ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் வாழும் பகுதிகளில் அதிக அளவில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும்.

"நியாய விலைக் கடைகளில் பொதுமக்களுக்கு குறைந்த சதவிகிதம் உணவுப் பொருளைத் தந்துவிட்டு, பெரும் பகுதியை மொத்தமாக அதிக இலாபத்திற்காக விற்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

"ஏழைகளுக்கும், கூலிவேலை செய்பவர்களுக்கும் கட்டாயமாக கோதுமை தரப்படுவது கூடாது.

"உணவுப் பிரச்சினையில் மத்திய அரசின் போக்கு நமது மாநிலத்திற்கு சாதகமானதாக இல்லை.

"மேலும், மாநிலத்தின் நீர்ப்பாசனத்தை அதிகரிக்க கோதாவரித் தண்ணீரைக் கொண்டுவர மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி ஆவன செய்வதற்கு முயலவேண்டும்."

கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்குத் திட்டம்

வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள நிதி விவரம்

கிராமக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்காக, சென்னை வரவு-செலவுத் திட்டத்தில் தேவையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தோல் பதனிடும் வேலைக்கு ரூ. 5 இலட்சம்; பாண்டத் தொழிலுக்கு ரூ. 2 இலட்சம்; தேனீ வளர்ப்புக்கு ரூ. 4 இலட்சம்; பனைவெல்லத் தொழிலுக்கு ரூ. 2,60,000; தீப்பெட்டி உற்பத்திக்கு ரூ. 7 இலட்சம்; கிராமக் கைத்தொழில் தொழிலாளர் நலனுக்கு ரூ. 4 இலட்சம்.

மேலும் இந்த ஆண்டில் 12,000 'அம்பர் சர்க்கா'க்களை இயக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மாவட்ட ஆட்சி மன்றங்கள் பற்றிய 'வெள்ளை அறிக்கை'

சென்னை, ஜூலை 1—

மாவட்ட ஆட்சி மன்றங்கள் பற்றிய 'வெள்ளை அறிக்கை'யைப் பரிசீலனை செய்ய ஒரு சட்ட சபைக் குழு நியமிக்கப்பட்டு அதன் சிபாரிசுகள் ஆராயப்பட்டு வருகிறதாம். அந்த குழுவின் முடிவுகள் தெரிந்த பின்னர் மேற்கொண்டு அரசாங்கம் செயல்படுமாம்.

மாவட்ட ஆட்சி மன்றங்களிடம் குவிந்து கிடக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து தரும் நோக்கத்தில் சென்னை அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதாம்,

ஊராட்சி மன்றத் தேர்தலில்

கழகத் தோழர் வெற்றி

தளவாய்பட்டணம், ஜூலை 1—

சென்ற திங்கள் 29-ம் நாள் நடைபெற்ற இவ்வூர் ஊராட்சி மன்ற உறுப்பினர் துணைத் தேர்தலில் கழகத் தோழர் நா. கு. மாசாணம் அவர்கள் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ந-நி)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.